SJSW 2025 9(2): 223-239

Sri Lanka Journal of Social Work (SJSW)
Volume 09 – Issue 02
DOI: https://doi.org/10.4038/sljsw.v9i2.41

15

# THE STUDY ON FACTORS THAT IMPACT THE LIVELIHOOD OF PERSONS WITH PHYSICAL DISABILITIES. (SPECIAL REFERENCES IN THE NORTHERN PROVINCE, SRI LANKA

**பிரதான செற்பதங்கள்: உடல் ஊனம், வாழ்வாதாரம், வரம்புகள், சமூகப் பணி, கிராமப்புறப்பகுதி**

**Jeyaruban, V**
National Institute of Social Development, Seeduwa, Sri Lanka
Email: jeyaruban@nisd.ac.lk

## ABSTRACT

*Over one billion people, or sixteen percent of the world's population, experience some form of disability, and disability prevalence is higher in developing countries. This number is increasing due to the rise in non-communicable diseases and longer life expectancy. In Sri Lanka, approximately 8.7 per cent of the population, or 1.6 million people, are identified as persons with disabilities, and many of them stay in rural settings. Persons with disabilities face many limitations in their day-to-day life, such as less education, poorer health outcomes, lower levels of employment, and higher poverty rates. Due to several limitations, many of the Person with Physical Disabilities face many limitations in building and bringing sustainable solutions in their life. This study focuses on identifying the challenges faced by Persons with disabilities in the Northern province. There are five districts located in the study location, and identify the factors that hinder building sustainable life, and provide the necessary facilitation and guidance through professional Social Work intervention.*

**KEY WORDS**: *Physical disability, Livelihood, limitations, Social Work, Rural area*

**சுருக்கம்**

உலக மக்கள்தொகையில் பதினாறு சதவீதத்திற்கும் அதிகமானோர், அதாவது ஒரு பில்லியனுக்கும் அதிகமானோர், ஏதோ ஒரு வகையான அங்கவீனத்தின அனுபவிக்கின்றனர், மேலும் வளரும் நாடுகளில் அங்கவீனத்தின் பாதிப்பு அதிகமாக உள்ளது. தொற்றாத நோய்கள் அதிகரிப்பதாலும், நீண்ட ஆயுட்காலம் காரணமாகவும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இலங்கையில், மக்கள்தொகையில் சுமார் 8.7

சதவீதம் பேர், அதாவது 1.6 மில்லியன் மக்கள், அங்கவீனர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர், மேலும் அவர்களில் பலர் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். அங்கவீனர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பல வரையறகளை எதிர்கொள்கின்றனர், குறிப்பாக குறைவான மற்றும் வரையறுக்கப்பட்ட கல்வி, மோசமான சுகாதார வசதிகள், குறைந்தளவான வேலைவாய்ப்புக்கள் மற்றும் அதிக வறுமை விகிதங்கள். பல வரையறைகள் காரணமாக, உடல் ரீதியாக அங்கவீனற்றவர்களில் பலர் தங்கள் வாழ்க்கையில் நிலையான தீர்வுகளை உருவாக்குவதிலும் நிலைபெறச் செய்வதிலும் பல வரையறகளை எதிர்கொள்கின்றனர். இந்த ஆய்வு வடக்கு மாகாணத்தில் உடல் ரீதியாக அங்கவீனமுற்றவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்துகிறது. ஆய்வானது ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. மேலும் நிலையான வாழ்க்கையை உருவாக்குவதற்குத் தடையாக இருக்கும் காரணிகளை அடையாளம் கண்டு, தொழில்வாண்மயான சமூகப்பணி இடையீட்டின் மூலம் தேவையான வசதிகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

**அறிமுகம்:**

உலக சனத்தொகையில் பதினாறு சதவிகிதம் அல்லது ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஏதோ ஒரு வகையான அங்கவீனத்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அங்கவீனத்தின் பாதிப்பு அதிகமாக உள்ளது தொற்றா நோய்கள் அதிகரிப்பதாலும், நீண்ட ஆயுட்காலம் காரணமாகவும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இலங்கையில், மக்கள்தொகையில் அண்ணளவாக 8.7 சதவிகிதம் அல்லது 1.6 மில்லியன் மக்கள் அங்கவீனமனவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் (UNPRPD, 2024).

உலக சனத்தொகையில் பதினாறு சதவிகிதம் அல்லது ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஏதோ ஒரு வகையான அங்கவீனத்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அங்கவீனத்தின் பாதிப்பு அதிகமாக உள்ளது. (World Bank 2025). தொற்றா நோய்கள் அதிகரிப்பதாலும், நீண்ட ஆயுட்காலம் காரணமாகவும் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இலங்கையில், மக்கள்தொகையில் அண்ணளவாக 8.7 சதவிகிதம் அல்லது 1.6 மில்லியன் மக்கள் அங்கவீனமனவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் (UNPRPD, 2024).

ஒரு தனிநபரின் அல்லது குழுவின் வழக்கமான செயற்பாடுகளுடன் ஒப்பிடும்போது கணிசமாக பலவீனமான காணப்படும் நிலை அல்லது செயல்பாடு அங்கவீனம் வரையறுக்கப்படுகிறது. இந்த செற்பதமானது தனிப்பட்ட நடவடிக்கைகளை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதில் உடல் குறைபாடு, புலன் குறைபாடு, அறிவாற்றல் குறைபாடு, அறிவுசார் குறைபாடு, மனநோய் மற்றும் பல்வேறு வகையான நாள்பட்ட நோய்கள் ஆகியன உள்ளக்கப்படுகின்றது. அங்கவீனம் என்பது சம்பந்தப்பட்ட நபருக்கு பல பரிமாண அனுபவமாக கருதப்படுகிறது.” (Weiss, 2010)

அங்கவீனமானவர்கள் குறைந்தளவான கல்வி, மோசமான சுகாதார விளைவுகள், குறைந்தளவான வேலைவாய்ப்பு நிலைகள் மற்றும் அதிக வறுமை நிலமை போன்ற பாதகமான சமூக பொருளாதார விளைவுகளை அனுபவிக்கும் வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. ஊட்டச்சத்து குறைபாடு, கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்புக்கான போதுமான அணுகல் இல்லாமை, பாதுகாப்பற்ற வேலை நிலைமைகள், மாசுபட்ட சூழல் மற்றும் பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லாதது போன்றவற்றால் வறுமை இயலாமைக்கான அபாயத்தை அதிகரிக்கக்கூடும். கல்வி இல்லாமை மற்றும் அதன்

விளைவாக ஏற்படும் வரையறுக்கப்பட்ட வேலை வாய்ப்புகள், குறைந்த ஊதியங்கள் மற்றும் மாற்றுத்திறனாளியுடன் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றின் மூலம் அங்கவீனம் வறுமையின் அபாயநிலையினை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பத்தினை அதிகரிக்கின்றது. (UNPRPD. 2024).

அங்கவீனர்கள் மத்தியில் அதிகளவிலான வேலையின்மை மற்றும் வறுமையை எதிர்கொள்கின்றனர். கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்புக்கான வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வறுமையினை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்கின்றது இதன் காரணமாக சமூக-பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பாரதூரமான சமூக களங்கங்களையும் ஏற்படுத்துகிறது. பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் போரின் விளைவுகளின் தாக்கம், கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கவீனர்களின நிலைமையானது மேலும் மோசமடைகிறது.


இலங்கையில் 8.6% மக்கள் தொகையினர் ஏதேனும் ஒரு வகையான அங்கவீனத்துடன் வாழ்கிறார்கள் என்று தற்போதைய தரவுகள் குறிப்பிடுகின்றன, அதாவது நாட்டில் குறைந்தது 1.7 மில்லியன் பேர் மாற்றுத்திறனாளிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பராமரிப்பாளர்களைச் சேர்த்தால், இலங்கையில் மாற்றுத்திறனாளிகளின் மொத்த எண்ணிக்கை குறைந்தது 5 மில்லியன் நபர்களாக இருக்கலாம். மாற்றுத்திறனாளிகளின் மக்கள் தொகை குறித்த துல்லியமான புள்ளிவிவரங்கள் கிடைத்தால் இந்த எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனோடு இணைந்த வகையில் இலங்கையில் முதியவர்களின் சதவீதம் அதிகரித்து வருவதால், அங்கவீனர்களின் எண்ணிக்கை 22 சதவீதத்தினை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் முதியோர் தொகை அதிகரிக்கும் போது, நாட்டில் வயது தொடர்பான குறைபாடுகள் மேலும் கூர்மையடையும் என எதிர்வுகூறப்படுகின்றது. (Attanayake, 2015)

அங்கவீனர்களின் சுதந்திரமான வாழ்க்கைப் பயணத்தில் பல தடைகளை எதிர்கொள்கின்றனர். இருப்பினும். அங்கவீனத்தின் காரணமாக ஆண்களும் பெண்களும் பாகுபாட்டை அனுபவிக்கின்றனர், எனினும் அங்கவீனமான பெண்கள் பால்நிலை மற்றும் அங்கவீனத்தோடு தொடர்புடைய காரணிகளால் பல்வேறுபட்ட சவால்களை அனுபவிக்கின்றனர் (WHO, 2011). அபிவருத்தி அடைந்து வரும் நாடுகளில், உடல் ரீதியாக அங்கவீனமான பெண்கள் அங்கவீனமான ஆண்கள் மற்றும் அங்கவீனமற்றவர்களை விட அதிகளவான வறுமை மற்றும் ஒதுக்கப்படுதல் போன்ற அபாயத்தை அதிகம் எதிர்கொள்கின்றனர் (UN, 2018). எடுத்துக்காட்டாக, இலங்கையில், மக்கள் தொகையில் 8.7% பேர் மாற்றுத்திறனாளிகளில் 57% பேர் பெண்கள் (UNFPA இலங்கை, 2021). சமூகத்தினால் பின்பற்றப்படும் கலாச்சார மற்றும் பாலினம் சார்ந்த நடைமுறைகள் இலங்கையில் அங்கவீனமான பெண்களை ஒதிக்கி வைத்தல் மற்றும் களங்கப்படுத்தலுக்கான காரணங்களாக காணப்படுகின்றது. (Samararatne, Soldatic and Perera, 2018).

விமர்சன ரீதியான அங்கவீனக் கோட்பாடானது, அங்கவீனம் என்பது உடலுடன் தொடர்புபட்ட ஒரு தனிப்பட்ட, மருத்துவ ரீதியான ஒரு விடயமாக அல்லாமல், கலாச்சார, அரசியல் மற்றும் சமூக நிகழ்வுகள் போன்ற பல்வேறு அணுகுமுறைகளின் தொகுப்பாக இதனை கவனத்தில் கொள்கின்றது. இந்த வழியில், இது பாரம்பரிய ரீதீயான அங்கவீனம் தொடர்பான ஆய்வுகளின் இலக்குகளைப் பகிர்ந்து கொள்கிறது. மேலும், விமர்சன ரீதியான கோட்பாடானது விமர்சன ரீதியான இனக் கோட்பாடு, பிந்தைய காலனித்துவக்

கோட்பாடு, மற்றும் கண்ட தத்துவக் கோட்பாடு போன்றவற்றுடன் இணைந்து தனது கருத்துக்களுக்கான சான்றுகளைப் பகிர்கின்றது. (மினிச் 2016)

தொழிற்பாடு, அங்கவீனம் மற்றும் சுகாததரம் தொடாடபான சர்வதேச வகைப்பாடு (ICF) தொடர்பான கட்டமைப்பானது தொழிற்பாடு மற்றும் அங்கவீனம் தொடர்பான தகவல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் விபரித்தல் தொடர்பான செயற்பாடுகளை விபரிக்கின்றது. சுகாதரரம் மற்றும் அங்கவீனம் தொடர்பான அளவீடு மற்றும் வரைவிலக்கணங்களின் அடிப்படையிலான எண்ணக்கரு மற்றும் மொழி தொடர்பான நியமங்களை வழங்குகின்றது. உலகம் முழுவதும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பல்வேறு தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த மக்களை உள்ளடக்கிய விரிவான சோதனைக்குப் பிறகு, 2001 ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்தினால் ICF பயன்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்டது.தொழிற்பாடு, அங்கவீனம் மற்றும் சுகாததரம் தொடாடபான சர்வதேச வகைப்பாடானது(ICF) அங்கவீனம் தொடர்பான பல்வேறு மாதிரிகளை ஒருங்கிணைத்துள்ளது. தொழிற்பாடு, அங்கவீனம் மற்றும் சுகாததரம் தொடாடபான சர்வதேச வகைப்பாடானது (ICF) அங்கவீனத்தினை உருவாக்குவதில் சுற்றுச்சூழல் காரணிகளின் பங்களிப்பினையும் அதனுடன் தொடர்புடைய சுகாதார நிலைமைகளின் பொருத்தப்பாட்டினையும் அவற்றின் விளைவுகளையும் அங்கீகரித்துள்ளது.




World Health Organization, 2002

அட்டவணை 1-ICF அத்தியாயங்கள் மற்றும் களங்கள்

| உடல் செயல்பாடு: | செயல்பாடுகள் மற்றும் பங்கேற்பு: |
|---|---|
| உளச்தொழிற்பாடுகள் | கற்றல் மற்றும் அதன் தொழிற்பாடுகள் |
| உணர்திறன் தொழிற்பாடுகள் மற்றும் வலி | பொதுவான இலக்குகள் மற்றும் அவற்றிற்கான தேவைப்பாடுகள் |
| குரல் மற்றும் பேச்சு தொழிற்பாடுகள் | தொடர்பாடல் |
| தோலின் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய பிரச்சினைகள் | இயங்கியல் |
| செரிமானம், வளர்சிதை மாற்றம் மற்றும் நாளமில்லா சுரப்பிகளின் செயல்பாடுகள் | சுய பராமரிப்பு |
| சிறுநீரக மற்றும் இனப்பெருக்க செயல்பாடுகள் | வாழ்க்கை முறைகள் |
| தோலின் தொழிற்பாடுகள மற்றும் அதனோடு தொடர்படைய தொழிற்பாடுகள். | ஆளிடைத் தொடர்புகள் மற்றும் உறவுமுறைகள் |
| நரம்பு. தசை மற்றும் எலும்பு இயக்கம் தொடர்பான தொழிற்பாடுகள். | வாழ்க்கையின் பிரதான பகுதிகள் |
| | சமூக, சமுதாயம், மற்றும் பொதுவான வாழ்க்கை முறைகள் |

| **உடல் கட்டமைப்பு** | **சுற்றுச்சூழல் காரணிகள்:** |
|---|---|
| பாலுறுப்பு மற்றும் இனப்பெருக்க முறைமைகள் தொடர்பான கட்டமைப்புக்கள். | தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் |
| தொழிற்பாடு தொடர்பான கட்டமைப்புகள் | இயற்கை சூழல் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட சுற்றுச் சூழல்கள் |
| தோல் மற்றும் அதனோடு தொடர்புடைய கட்டமைப்புக்கள். | சுற்றுச்சூழலில் மாற்றங்கள் |
| நரம்பு மண்டலத்தின் கட்டமைப்புகள் | ஆதரவு மற்றும் உறவுமுறைகள் |
| கண், காது மற்றும் அதனோடு தொடர்புடைய கட்டமைப்புகள் | மனப்பாங்கு |
| குரல் மற்றும் பேச்சுடன் தொடர்பான கட்டமைப்புகள். | சேவைகள், முறைமைகள் மற்றும் கொள்கைகள் |
| இருதய, நோய் எதிர்ப்பு மற்றும் சுவாசக் கட்டமைப்புகள். | |

(World Health Organization, 2002)

“ஒரு அங்கவீனர்களுக்கு ஒரு தொகைப் பணத்தினை மட்டும் கொடுப்பது அவருக்கு உதவப் போவதில்லை. தனிப்பட்ட நன்கொடைகளை வழங்குவதன் மூலம் நாம் பிச்சை எடுப்பதை மட்டுமே நிலைநிறுத்துகிறோம், இது ஒரு வளமான சமூகத்தில் ஆரோக்கியமான அறிகுறி அல்ல” (Sunday Observer 2010). அங்கவீனர்களுக்ககளுக்கு அனுதாபம் காட்டி சில நாணயங்களை கொடுப்பது அவர்களுக்கு உதவாது. அது அவர்களை மேலும் சார்ந்து இருக்கச் செய்யும், மேலும் அது அவர்களின் திறனை உணர்ந்து தாங்களாகவே எழுந்து நிற்க விடாமல் தடுக்கும். அவர்கள் உண்மையில் என்ன அனுபவிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு உண்மையில் என்ன தேவை என்பதைக் கண்டறிவதுதான் ஊடாக அவர்களின் நிலையான மாற்றங்களை கொண்டு வரமுடியும்.

அங்கவீனர்கள் தொழில்புரியும் பல்வேறு இடங்களில் அணுகும் வசதிகள் முறையாக காணப்படுவதில்லை. பல இடங்களில் அணுகும் வசதிகள் காணப்பட்ட போதிலும் அங்கவீனர்கள் தங்கள் உதவி சாதனங்களுடன் அவற்றினை பயன்படுத்துவது கடினமாகவுள்ளது. ”இலங்கையில் 2-3% கட்டிடங்கள் மட்டுமே அங்கவீனர்கள் அணுகக்கூடியவை என்று கூறப்படுகிறது. சட்ட அமலாக்கத்தில் காணப்படும் வரையறைகள் இதற்கான பிரதான காரணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன” (Sunday times 2014).

இந்த ஆய்வு நாட்டின் வடமாகணத்தில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியது: இலங்கை உள்நாட்டுப் போர் 2009 இல் முடிவடைந்தது, ஆனால் 30 ஆண்டுகால மோதல் பொதுமக்களைப் பாதித்தது, மேலும் போரின் தாக்கம் இன்றும் பரந்த அளவிலான ஆராய்ச்சிகளுக்கு உட்பட்டவையாக காணப்படுகின்றது. வரலாற்று ரீதியாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சுகாதாரம் குறித்த தரவு பற்றாக்குறை உள்ளது, அவை மக்கள்தொகை சுகாதார ஆய்வுகளால் உள்ளடக்கப்படவில்லை. (Ministry of Health, Northern Province, 2016). இவை நீண்ட கால நோய்களுக்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது. போருக்குப் பிந்தைய வியக்கத்தக்க நோய்கள் அதிகரிப்புகள் இருப்பதாகக் கருதப்பட்டாலும், அங்கவீனம் தொடர்பான பரவல் பற்றிய தகவல்கள் குறைவாகவே காணப்படுவதாகவுள்ளது. இதேபோல், இராணுவ நடவடிக்கையின் விளைவாக, விதவைகள் மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது (மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் துறை, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, இலங்கை, 2015, வடக்கு மாகாண சுகாதார அமைச்சகத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது)

2016 வீட்டின் தலைவியாக இருக்கும் பெண்களிடையே தாக்குதல் மற்றும் பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட சிக்கலான மனநலம் மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகள் அதிகரித்து வருவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன (சோமசுந்தரம் மற்றும் சிவயோகன், 2013, வடக்கு மாகாண சுகாதார அமைச்சகத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது, 2016).

**நோக்கங்கள்:**

**பொது நோக்கம்:**

உடல் ரீதியாக அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்வாதார வாய்ப்புகளை கட்டுப்படுத்தும் காரணிகளை ஆராய்தல்.

**உப நோக்கங்கள்:**

உடல் ரீதியாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான பன்முக அமைப்புகளால் சேவை வழங்கும் வழிமுறைகளின் செயல்திறனை மதிப்பிடுதல்.

உடல் ரீதியாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான விரிவான மற்றும் ஒருங்கிணைந்த சேவைக்கான பல்துறை குழு அணுகுமுறைகளின் தேவைகளை அடையாளம் காணுதல்.

இந்த ஆய்வானது பண்புரீதியான முறையை உள்ளடக்கியது. மிக பரந்துபட்டளவில் கவனிக்கப்பட வேண்டிய வாழ்வாதார சவால்களை அடையாளம் காணுதல் முக்கியமாக பண்பு ரீதியான முறையைப் பயன்படுத்தி ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கவீனர்கள் பெரும்பாலும் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள், மேலும் அவர்கள் மீதான சமூக அணுகுமுறை எப்போதும் நேர்மறையானதாக இல்லை. எனவே, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை ஆராய வேண்டும். உடல் குறைபாடுகள் உள்ளவர்கள் தங்கள் வாழ்வாதார நடவடிக்கைகளை வளர்ப்பதிலும் நிலைநிறுத்துவதிலும் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள, பண்பு ரதீயான முறையைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச செயல்பாடு, இயலாமை மற்றும் சுகாதார வகைப்பாடு (2001) படி, தரவு பகுப்பாய்வு மூன்று முக்கிய கருப்பொருள்களாக பிரிக்கப்பட்டுள்ளது, அதாவது உடல்நலம், சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் தனிப்பட்ட காரணிகள். ஆய்வுக் கண்டுபிடிப்புகளை இலக்கிய மீளாய்வு மற்றும் கோட்பாட்டு ரீதீயான கட்டமைப்போடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

சுகாதரரம் என்பது "நோய் அல்லது பலவீனம் இல்லாதிருத்தலோடு தொடர்புபட்டது மட்டுமல்ல மாறாக முழுமையான உடல், மன மற்றும் சமூக நல்வாழ்வோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்ற நிலையினைக் குறிக்கின்றது, " என உலக சுகாதார நிறுவனம் வரையறுக்கின்றது (WHO 1948). சுகாதாரத்தின் கீழ், ஆரோக்கியம் அவரது உடல் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை எவ்வாறு பாதித்தது, செயல்பாடுகள் மற்றும் பங்கேற்பை மட்டுப்படுத்தியது என்பது குறித்த தரவுகள் சேகரிக்கப்படுள்ளது.. ஒரு தனிநபரின் நல்வாழ்வை அவரது சொத்துக்களால் அளவிட முடியாது் அது அவர்களின் முழுமையான ஆரோக்கியத்தால் அளவிடப்பட வேண்டும். உடல் திறன்கள் மற்றும் நல்வாழ்வு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கிறது.அவர்களின் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**உடல் செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்புகள் (குறைபாடுகள்)**

உடல் கட்டமைப்பும் செயல்பாடும் சரியாக இருக்கும்போது ஒரு பணிகளை இலகுவாக செய்து மேற்கொள்ள முடியும் மாறாக உடல் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் சரியான முறையில் செயற்படாதபோது பணிகளைச் செய்வது மிகவும் கடினமானதாக காணப்படும்.

"அங்கவீனத்திலிருந்து எம்மால் விடுபட முடியாது. நமது அன்றாட வேலைகளைச் செய்து வாழ ஒரு நல்ல மனநிலையை நாம் கொண்டிருக்க வேண்டும்." (நேர்காணல் 02).

உடல் அங்கவீனம் என்பது உடலில் மட்டுமே இருக்க வேண்டும், மனதளவில் அல்ல. உடல் அங்கவீனமானது வேலையில் தாமதத்தை மட்டுமே ஏற்படுத்தும், ஆனால் குறிப்பிட்ட நபரின் அங்கவீனம் மனதளவில் வீழ்ச்சியடைந்தால், அது அவருடை வினைத்தினான செய்பாடுகளை மட்டுப்படுத்துவதாக காணப்படுகின்றது அத்தோடு அவர்களைச் தங்கியிருக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும். ‘‘அங்கவீனர்களில் பலர் வேலையற்றவர்களாகக் காணப்படுகின்ற அதேவேளை மிகக் குறைவானவர்களே வேலை செய்கிறார்கள். அவர்களில் சிலர் சிறப்பாகச் செயல்படுகிறார்கள்” (நேர்காணல் 01). மேலும் அவர் குறிப்பிடுகையில் அங்கவீனர்களின் நேர்மறையான மனநிலையும் வெளிச் சூழலில் சாதாகமான பங்களிப்பும் அவர்களின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவ்வாறான நிலைமைகள் அங்கவீனர்கள் சிறப்பாகச் செயபடுவதற்கான ஊக்குவிப்பினையும் வழங்குகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படும் பல்வேறு மட்டப்பாடுகள் அங்கவீனர்களுடைய வினைத்திறனான செயற்பாடுகளுக்கு பாரியளவில் தடைகளாகக் காணப்படுகின்றது.

| |
|---|
| ”சில தனிநபர்கள் பிறப்பிலிருந்தே அங்கவீனர்காகக் காணப்படுகின்றனர், இருப்பினும் ஒவ்வொரு அங்கவீனர்களுக்கும் எதாவது ஒரு திறமையினை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அதேவேளை எந்தவொரு நபரும் வாழ்நாளில் எந்த நேரத்திலும் அங்கவீனத்தினை எதிர்கொள்ளும்போது நிலைமையினை எதிர்கொள்ளுகின்றனர்.” எங்களுடைய திறமைகளை அடையாளம் கண்டு அதற்கான தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மற்றும் தனியார்துறையினர் குறைந்தளவிலேயே மேற்கொள்கின்றனர். (நேர்காணல் 05). |

அங்கவீனம் என்பது ஒரு நபர் எந்த நேரத்திலும் சந்திக்கக்கூடிய நிகழ்வாகும். அந்த அங்கவீனமானது பிறப்பிலிருந்தே அல்லது இது வாழ்நாளின் எந்த நேரத்திலும் ஏற்படலாம். ஒருவருக்கு பிறப்பிலிருந்தே காணப்படுகின்ற அங்கவீனமானது அவர் வாழ்நாள் முழுவதும் அதைச் சமாளித்து, அதற்குப் பழகிவிடுவார். மாறாக ‘‘ஒருவருக்கு வாழ்நாளின் நடுவில் ஊனம் ஏற்பட்டால், புதிய சூழ்நிலைக்குப் பழகுவது மிகவும் கடினமாக இருக்கும். அதற்குப் பழக அதிக நேரம் எடுக்கும்” (நேர்காணல் 05). முன்னயை காலத்தில் செப்பனான உடல் கட்டமைப்புடன் பணிகளைச் செய்யப் பழகிய ஒருவரால், இடைநடுவில் ஏற்படக் கூடிய அங்கவீனத்தினால் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொள்வது கடினமானதாகக் காணப்படும். அங்கவீனத்தின் பின்னர், அதே பணிகள் முன்பு போல் வினைத்திறனாக செயற்படுவதற்கு உடல்ரீதியான மட்டுப்பாடுகள் தடையாகக் காணப்படுகின்றன. . ‘‘உடல் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் சரியாக இல்லாதபோது, அங்கவீனர்கள் தமது இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு ஏனையவர்களோடு ஒப்பிடுகையில் அதிகளவிலான நேரத்தினை எடுத்துக்கொள்கிறார்கள்”. (இலக்குக் குழுக்கலந்துரையாடல்). வேலை எவ்வளவு அவசரமாக இருந்தாலும், மாற்றுத்திறனாளிகள் அதை முடிக்க நேரம் எடுப்பார்கள். இவ்வாறான மட்டுப்பாடுகள் தொழலில் தருனர்கள் தமது இலக்குகளை பூர்த்தி செய்து கொள்வதிலும் வாடிக்ககையாளர்களை தொடர்ச்சியாக பேணிக்கொள்வதிலும் சவால்களை எதிர்கொள்கின்றனர். இலாப நோக்கத்தினைக் கொண்ட தனியார் இவ்வாறான செய்பாடுகளை மேற்கொள்வதற்கு தயக்கம் காட்டுகின்ற காரணத்தினால் அரசாங்கமானது புதிய தொழில்நுட்பங்களின் உதவிகளுடன் அங்கவீனர்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக மாற்றுவதனுடாக இவ்வாறான மட்டுப்பாடுகளை குறைந்தளவில் பேணிக்கொள்ள முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார்துறையில் அவர்களுக்கான வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்க முடியுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

"நான் ஒரு வலது கை பழக்கம் உள்ளவன். நான் எனது சகல நடவடிக்கைகளையும் வலது கையினாலேயே செய்து முடிக்கும் பழக்கம் கொண்டவன். விபத்து ஒன்றினால் எனது வலது கையினை இழந்து விட்டேன். அதன்பிறகு, என் இடது கையினைக் கொண்டு எனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் அதனை பழகுவதற்கும் எனக்கு சிறிது காலம் பிடித்தது" (நேர்காணல் 03).

நேர்காணல் 3 இல் இடது கையைப் பழக்கப்படுத்துவது கடினமாக இருந்தது. குறிப்பிட்ட நபர் 20 வயதில் வீதி விபத்தில் தனது வலது கையை இழந்தார். ஒற்றைக் கையால் செய்வது கடினமாக இருந்தது. கை துண்டிக்கப்பட்ட பின்னர் அதனைச் சமாளிக்கும் வரை எந்தப் பணிகளையும் செய்யவில்லை. வலது கைப் பழக்கம் உள்ளவராக இருப்பதால், இடது கையால் பணிகளைச் செய்யப் பழகுவது நேரத்தை எடுத்துக்கொள்ளும் செயலாகவே காணப்பட்டது. இந்தக் காரணத்தினால், வேலை செய்யும் இடத்தில் சில கால தாமதங்களை சந்தித்தார், மேலும் கால எல்லைக்குள் இலக்குகளை பூர்த்தி செய்வதில் பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது. இருந்தபோதிலும், அந்த நபர் இடது கையைப் பழக்கப்படுத்தி பணிகளைச் செய்தார். "முன்பு இரு கைகளாலும் செய்யப்பட்ட பணிகளைச் செய்ய ஒரு கையை மட்டுமே பயன்படுத்த வேண்டியிருக்கும் போது, அங்கவீனர்கள் மிகப்பெரிய சிரமத்தை எதிர்கொள்கின்றனர்" (நேர்காணல் 03). நேர்காணல் செய்பவர் மேலும் கூறுகையில், எனது பணிகளை இலகுபடுத்துவதற்கான அடிப்படை வசதிகளின் மட்டுப்படானது எனக்கு பாரியளவான மனச்சோர்வினை ஏற்படுத்தியது. எனது தளராத முயற்சியும் சகபணியாளர்களின் ஒத்துழைப்பும் என்னுடைய தொழிலில் என்னை இன்றுவரை நிலைபெறச்செய்துள்ளது. இயந்திர மற்றும் நவீன தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கு அப்பால் சகதொழிலாளர்களின் புரிந்துணர்வு மற்றும் ஆதரவு என்பன அங்கவீனர்களுடைய செயற்பாடுகளை இலகுபடுத்துவதில் பாரியளவில் பங்களிப்பினை வழங்குககின்றது.

நாளாந்த வாழ்கைவட்டத்தில் நாம் பல்வேறு வகிபங்குகள் மற்றும் அவற்றுக்கான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உடல்ரீதியாக அங்கவீனமுற்றவர்கள் தமது நாளாந்த வாழ்கைவட்டத்தில் தமது பல்வேறு வகிபங்குகள் மற்றும் அவற்றுக்கான செயல்பாடுகளை மேற்கொள்வதில் பல்வேறுபட்ட சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். மேலும் அவர்களால் சமூகத்திலுள்ள ஏனையவர்களைப் போல் செயல்பட முடியாமலும் போகலாம். எனவே, அவர்கள் செய்யும் செயல்பாடுகளில் சில எல்லைகள் காணப்படுகின்றது. எனவே, அவர்கள் செய்யும் செயல்பாடுகளில் சில வரையறைகள் காணப்படுகின்றன.

" எனது அங்கவீனமானது எனது செயற்பாடுகளுக்கு மட்டுப்படாக காணப்படுவதன் காரணமாக ஏனையவர்களை போலல்லாமல், எனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகளவான நேரத்தினை ஒதுக்க வேண்டியுள்ளது. அங்கவீனர்கள் ஏதாவது செயற்பாடுகளில் பங்கோற்பதாயின் ஏனையவர்களை விட அதிகளவான நேரத்தினை செலவு செய்யவேண்டியுள்ளது. எடுத்துக்கர்டாக உணவு உட்கொள்ளுதல் மற்றும் ஆடையணிதல்" (நேர்காணல் 09)

அங்கவீனர்கள் தங்களுக்கு காணப்படுகின்ற மட்டுப்பாடுகள் காரணமாக பல செயல்பாடுகளில் விரைவாகச் செயல்படுவது கடினமாகக் காணப்படுகின்றது.. "அங்கவீனர்கள், ஏனையவர்களைப் போல் அல்லாது தமது செயற்பாடுகளை திறம்படவாற்ற முடியாது உதாரணமாக விளையாட்டுச் செயற்பாடுகள், மற்றும் அன்றாட செயற்பாடுகள் திறமையாக மேற்கொள்ள முடியாது" (நேர்காணல் 06). ஏனையவர்கள் ஒரு சரியான உடற் கட்டமைப்பினைக் கொண்டு காணப்படுகின்றனர் இதன் காரணமாக

அவர்கள் தங்களுடைய வேலையை மிகவும் திறமையாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ள முடிகின்றது. அங்கவீனர்களுக்கு காணப்படுகின்ற உடற்கட்டமைப்பிலான வரையறைகள் ஏனையவர்களைப் போல திறமையாகச் செயல்படுவதில் வரையறைகளை தோற்றுவக்கின்றன.

இலங்கையின் அங்கவீனர்களுக்கான தேசிய கொள்கையானது (2003) அங்கவீனர்களும் ஏனையவர்களைப் போல சமமாக நடத்தப்பட வேண்டும் என்று கூறினாலும், அங்கவீனர்கள் பல நேரங்களில் தங்கள் பணியிடம் மற்றும் பொதுவிடங்களில் பல்வேறுபட்ட பாகுபாடுகளுக்கு உட்படுகின்றனர். குறிப்பாக முறைசார தனியார்துறைகளில் பணியாற்றும் பல அங்கவீனர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்க காணப்படும் வரையறைகள் காரணமாக குறைந்தளவான கொடுப்பனவுகளையே பெற்றுக் கொள்ளுகின்றனர். நீண்ட வேலைநேரம் மற்றும் குறைந்தளவான கொடுப்பனவுகள் மேலும் அவர்களுடைய முன்னேற்றத்தினையும் எதிர்கால திட்டமிடல்களையும் பல்வேறு சவால்களுக்கு உட்படுத்துகின்றது. பொருளாதார மாதிரியின் பிரதிபலிப்பினை இது எடுத்துக்காட்டுகின்றது.

”எனக்கு காணப்படும் வரையறைகள் எனது செயற்பாடுகளில் பல மட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றது. என்னால் கடினமான வேலைகளைச் செய்யமுடியாது. இதன் காரணமாக எனக்க பெரும்பாலான நேரங்களில் இலகுவான வேலைகளே தரப்படுகின்றது. இதன் காரணமாக அவர்கள் எனது சம்பளத்தைக் குறைத்தனர். நான் ஒரு உதவி எழுதுனர் பதவிக்கு விண்ணப்பித்தேன், எனினும் அப்பதவிக்கு விண்ணப்பிக்கும் போது கடினமான வேலைகள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை” (நேர்காணல் 05).

வேலையிடத்தில் காணப்படும் பாகுபாடு, ஒப்பீட்டளவில் காணப்படும் குறைந்தளவான ஊதியம் மற்றும் அநீதி என்பவற்றுக்கும் தொழில் இழப்புக்குமிடையில் நேர்கணிய தொடர்பு காணப்படுகின்றது. இதன் காரணமாக பல அங்கவீனர்க்ள் தமது தொழில்களை தாமாகவே கைவிட வேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறான தொடச்சியான பாகுபாடுகள் அவர்களின் மனநிலையில் எதிர்க்கணியமாக தாக்கத்தினை ஏற்படுத்துகிறது” (நேர்காணல் 05). தொடர்ச்சியான ஏமாற்றத்தை அனுபவிக்கும் போது அங்கவீனர்கள் சில நேரங்களில் சோர்வடைந்து தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள் என்று நேர்காணல் செய்பவர் மேலும் கூறினார். சமூக மாதிரியானது சமூகத்தில் காணப்படும் வரையறைகள் அங்கவீனர்களுடைய செயற்பாடுகளுக்கான மட்டுப்பாடுகளைஏற்படுத்துகின்றன. சமூதாயமானது பெரும்பாலும் அங்கவீனர்களுடைய வரையறைகள் மற்றும் மட்டுப்பாடுகளையே முதலில் பார்க்கிறது, பின்னரே அவர்களுடைய ஏனைய விடயங்களில் கவனம் செலுத்துகழன்றது. பொது நிர்வாக சுற்றறிக்கையில் (1988) வேலை வாய்ப்புகளில் குறைந்தது 3 வீதம் அங்கவீனர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. பொது நிர்வாக சுற்றறிக்கையில் இது போல் கூறப்பட்டிருந்தாலும், அது முறையாக செயல்படுத்தப்படவில்லை. அங்கவீனர்களுடைய வேலை வாய்ப்புக்களையும் ஏனையவர்கள் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளும் காணப்படுவதனை மறுக்கமுடியாதுள்ளது. இது அங்கவீனர்களின் திறமையின்மை மற்றும் அதற்கான முயற்சிகிளில் இருந்து ஒதுங்கி காணப்படுவதனையும் ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றது. அங்கவீனர்கள் எந்தவித சிக்கலற்ற முறையில் தமது செயற்பாடுகளை திறமையாக மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதானது அவர்களுடைய இருப்புக்கான காரணமாக அமைகின்றது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதற்கு பல்வேறு நிறுவனங்கள் தயக்கம் காடடுவதற்க்கு காரணமாக நிறுவனங்கள் இலக்கு

சார்ந்த அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இலக்குகளை அடையவேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

| |
|---|
| " என்னுடைய வருமானமானது அனைத்து குடும்ப செலவுகளையும் முறையாக மேற்கொள்வதற்கு போதுமானதாகக் காணப்பட்டது. ஆனால் அங்கவீனத்தின் பின்னா் என்னால் பழைய வருமானத்தினை ஈட்டிக்கொள்ள முடியாதுள்ளது. இதன் காரணமாக நான் பாரதூரமான மனவுழைச்சலுக்கு உட்பட்டுள்ளேன்". (நேர்காணல் 08) |

அங்கவீனமானது ஒரு நபரின் வாழ்க்கையில் ஏற்படமுடியும் இதன் காரணமாக அவர்கள் பல்வேறுபட்ட உடல், உள மற்றும் சமூகரீதியான சவால்களுக்க முகம்கொடுக்க நேரிடுகின்றது. இது பொதுவாக எல்லா நபர்களும் முகம்கொடுப்பதாக இருந்தாலும் இது அங்கவீனா்களின் வாழ்கையில் ஏற்படுத்தம் தாக்கமானது மிகவும் நீண்டு நிலைப்பதாக காணப்படுகின்றது. கொள்கை வகுப்பாளா்களுடன் இணைந்து பொருத்தமான திணைக்களங்கள் மற்றும் பங்குதாரர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனுடாக நேர்மயமான மனநிலை மற்றும் சமூதாயத்துடன் ஒத்திசைந்து செயற்படும் இயலுமையினை அங்கவீனா்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும் என்பதனை ஆய்வின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. நேர்காணல் செய்தவர் மேலும் கூறுகையில், மாற்றுத்திறனாளிகள் மனரீதியாக வீழ்ச்சியடையும் போது சோர்வடைந்து பின்வாங்குகிறார்கள். தங்களால் முடிந்த வேலைகளைச் செய்வதற்குப் பதிலாக இயலாமையைப் பற்றி தொடர்ந்து யோசித்துக்கொண்டிருந்தால், அவர்கள் சோம்பேறிகளாகவும் சார்ந்திருப்பவர்களாகவும் மாற்றமடைகின்றனர். "சில அங்கவீனா்கள் எப்போதும் தங்களுடைய வரையறைகளை தமக்கு வரப்பிரசாதமாகக் கொண்டு தெருக்களில் பிச்சை எடுக்க முயற்சி செய்கிறார்கள்" (நேர்காணல் 09). சமூகப்பணியாளா்கள் மற்றும் பொருத்தமான அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதனுடாக அவா்களையும் சமூகத்தில் கௌரவமான நபர்களாக மாற்றிக்கொள்ள முடியம் என பலமான நம்பிக்கை காணப்படுகின்றது.

பௌதீக மற்றும் சமூக சூழலானது மனித செயற்பாடுகளை தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கின்றது. தனிநபர் தனது குடும்பம், அயலவர்கள், முறைசார்ந்த மற்றும் முறைசார குழுக்களுடனான தொடர்புகள், நிறுவனங்கள், சமூதாயம், சமூகம் மற்றும் உலகநாடுகளுடனான தொடர்புகனை தமது வாழ்க்கைக்கட்டங்களில் விரிவாக்கக் கொண்டு செல்வதனை நடைமுறை மற்றும் கோட்பாட்டு ரீதியான அணுமுறைகளினூடாக கண்டுகொள்ளக்கூடியதாகவுள்ளது.யூரி பிரான்∴.பென்பிரென்னரின் சுற்றுச்சூழல் அமைப்பு கோட்பாடானது இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். சுற்றுச்சூழல் காரணிகளின் செல்வாக்கானது உடல் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை எவ்வாறு பாதித்தன என்பது குறித்த பல்வேறு ஆய்வுகள் கோட்பாட்டு ரீதியாக நிறுவியுள்ளன. இலங்கையில் அங்கவீனா்களினுடைய செயற்பாடுகளை தீர்மனிப்பதில் சுற்றுச்சூழல் காரணிகள் முக்கிய பங்குவகிக்கின்றது.உடல்ரீதியான அங்கவீனமாகது வெளிப்படையானது. இது அங்கவீனா்களை ஏனையவர்களிடமிருந்து இலகுவாக வெறுபடுத்திக் காட்டுகின்றது. பெரும்பாலான நேரங்களில், தொழில்களுக்காக நபர்களை தெரிவுசெய்யும் போது செயல்திறனை மையப்படுத்திய அணுகுமுறைகளை பின்பற்றுகின்றன. இதன் காரணமாக அங்கவீனா்கள் தொழிற்துறைத் தெரிவில் புறக்கணிகப்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றது.

“ நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தமது கீழ்கட்டுமான செயற்பாடுகளை அங்கவீனம் அல்லாதவர்களுக்கு வேலை கொள்வதற்கு ஏற்ற வகையிலே தமது கீம்கட்டுமானங்களை வடிவமைத்துள்ளன. இதன் காரணமாக அங்கவீனமல்லாதவர்கள் மட்டுமே பயனடைகின்றனர்”. (நேர்காணல் 08)

பொருளாதார மாதிரியின் அடிப்படையில் ஒருவரின் இயலுமையானது உற்பத்தி வெளியீட்டில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துவதாக கோடிட்டுக்காட்டுகின்றது. அங்கவீகமானது ஒருவரின் உற்பத்தித்திறனில் கணிசமான பங்களிப்பினை வழங்குகின்றது. “ நிறுவனங்களில் காணப்படுகின்ற வரையறைகள் காரணமாக பெரும்பாலான அங்கவீனர்கள் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படுவதிலிருந்து புறக்கணிகப்படுகின்றனர்” (மையக் குழு கலந்துரையாடல்). ஆங்கவீனர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கும் 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கசட்டம் 2006 இல் நடைமுறைக்கு வந்த போதிலும், அங்கவீனர்களுக்குத் தேவையான வசதிகள் வழங்கப்படவில்லை. சக ஊழியர்களின் செயத்திறனோடு ஒத்திசைவான தன்மையில் காணப்படும் வரையறைகள் காரணமாக பல நிறுவனங்கள் அங்கவீனர்களை வேலை கொள்வதில் தயக்கம் காட்டுகின்றன. இதன் காரணமாக பெரும்பாலான அங்கவீனர்கள் வேலைகான நேர்காணலின் போது நிராகரிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான அங்கவீனர்கள் சமய மாதிரியினை இதற்கான காரணமாக பொருள்கோடுகின்றனர். சுற்றுசூழலில் காணப்படுகின்ற வரையறைகள் தொழில்வாய்பில் மட்டுமன்றி ஏனைய வாழ்க்கை பரிமாணங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக கல்வி மற்றும் போக்குவரத்து செயற்பாடுகளில் காணப்படும் வரையறைகள் நேரடியாகவே மறைமுகமாகவே தொழில்வாய்ப்புகளிலும் செல்வாக்க செலுத்துகின்றது.

“ அங்கவீனர்கள் தொடர்பாக ஆட்சிக்குவரும் ஒவ்வொரு அரசாங்கமும் அங்கவீனர்கள் தொடர்பாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டாலும் அங்கவீனர்களுடைய வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை”(மையக் குழு கலந்துரையாடல்).அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகளுக்க மேலதிக அவர்களுடைய வாழக்கையில் நிலைபேறு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளை பல்வேறு தரப்பினருடன் இணைந்து மேற்கொள்ளுதல் வேண்டும். கிடையான மற்றும் நிலைக்குத்தான செயற்பாட்டு அணுமுறைகள் பல்துறைசார்நத நிபுணத்துவமிக்க பங்குதாரர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுதல் அங்கவீனர்களுடைய வாழ்கையில் தனித்துவமாகவும் கௌரவத்துடனும் நிலைபேறான வாழ்க்கை சக்கரத்தினை அமைத்துக் கொள்ள வழிவகுக்கும்மென ஆய்வு பெறுபேறுகள் எடுத்துக்கூறுகின்றன.

“ அங்கவீனர்களுக்கு அரசாங்த்தினாலும் ஏனைய துறைகளினாலும் வழங்கப்படுகின்ற அதிகளவான பாதுகாப்பானது அவர்களை மேலும் தங்கியிருப்பதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்துவதோடு அவர்களுடைய தனித்துவமான தன்மைக்கும் மனித கௌரவத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. (நேர்காணல் 04)

அங்கவீனர்களுடைய திறமைகளில் பொரும்பாலான மக்கள் நம்பிக்கை கொள்வதில்லை. குறிப்பாக பெற்றோர் மற்றும் ஏனையவர்களுக்கும் இதன் காரணமாக அவர்களுக்கு அதிகளவில் உதவிகளை வழங்குகின்றனர். அங்கவீனர்கள் சுதந்திரமாக வாழவும், சுதந்திரம் பெறவும், தங்கள் உரிமைகளுக்காக நிற்கவும் விரும்புகிறார்கள் என்பதனை மையக்குழு கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்தப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட நபருக்கு அங்கவீம் ஏற்பட்ட நாளிலிருந்து, குடும்பம் அவர்களுக்காக எல்லாவற்றையும்

வழங்குகிகன்றது. “அதிகப்படியான பாதுகாப்பு அங்கவீனர்களை கல்வியறிவு இல்லாதவர்களாகவும் வேலையில்லாதவர்களாகவும் மாற வழிவகுக்கிறது” (நேர்காணல் 02). பெரும்பாலான குடும்பங்கள் அங்கவீனர்களை தங்கள் வேலையைத் தாங்களாகவே செய்ய விடமாட்டார்கள் என்று நேர்காணல் செய்பவர் மேலும் கூறினார். அங்கவீனர்களுடைய கல்வி, சுகாதாரம், திறன்களில் காணப்படும் மட்டுப்பாடுகள் சுற்றுக்சூழல் வரையறைகள் என்பன அவர்களை நீண்டகால வறுமைச் நச்சு சக்கரத்தினுள் அவர்களை தள்ளிவிடுகின்றது. “அவர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் மட்டுமே அவர்களுக்கு உதவ வேண்டும். இல்லையெனில், அவர்கள் தங்கள் வேலையைத் தாங்களாகவே செய்ய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இலங்கை மாற்றுத்திறனாளிகள் கொள்கையும் மாற்றுத்திறனாளிகள் அதிகமாகப் பாதுகாக்கப்படக்கூடாது என்று கூறுகிறது. அவர்களுக்குத் தாங்களாகவே கற்றுக்கொள்ள வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எனவே, இது அவர்களை ஒரு நாள் சகல பாதிக்கப்புகளில் இருந்து வெளிக்கொண்டுவர பங்களிப்பு செய்யும்.

“பெரும்பாலான எங்களுடைய ஆட்கள் சுயதொழிலில் செயற்பாடுகளிலேயே ஈடுகடுகின்றனர். ஆனால் எம்மில் பலர் அதில் நிலைபேறான பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாதுள்ளது. சில சமயங்களில் இருக்கின்ற முதலினையும் இழக்கக வேண்டியுள்ளது”. (நேர்காணல் 03)

அங்கவீனமான ஒருவர் சுயதொழில் செயற்பாடுகளை மேற்கொண்டாலும் நியாயமற்ற போட்டி மற்றும் நிலைபேறான சந்தை வாய்ப்புக்கள் அற்றதன்மை போன்ற பல்வேறு காரணிகளினால் பொரும்பாலான அங்கவீனர்கள் தனது சொந்த தொழில்துறையினை ஆரம்பித்தாலும் நிலைபேறான நிலையினை அடைய முடியாதுள்ளது. இவ்வாறான முன்னுதாரனங்கள் பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளை தொடங்குவதில் தயக்கம் காட்டுவதினை ஆய்வின் பெறுபேறுகள் சுட்டிக்காட்டுகின்றன. முறையான பயிற்சி, வழிகாட்டல்கள் மற்றும் சந்தைவாய்புக்கான முன்னாய்வுகள் என்பன அங்கவீனர்கள் பொருத்தமான தொழில்வாய்ப்புக்களை தொடங்குவதற்கும் நிலைபேறான செயற்பாடுகளை அடைந்துகொள்வதற்குமான சதகமான நிலையினை அடைய வழிசமைக்கும்.

சில நேரங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படுவதில்லை. அவர்கள் முற்றிலும் ஓரங்கட்டப்படுகிறார்கள். அவர்களின் திறன் பெரும்பாலும் இயலாமையால் அளவிடப்படுகிறது.

“ பல சந்தர்ப்பங்களில் எங்களைப்பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் போது எங்களுடைய பங்கேற்புக்கான சந்தர்ப்பங்கள் பெருமளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. எமக்கான உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில் எம்மிடம் காணப்படுகின்ற தடைகளோடு சமூகத்தில் காணப்படுகின்ற தடைகள் எங்களுடைய பங்குபற்றலினை மேலும் சிக்கலயடையச் செய்துள்ளது. நடைமுறையில் காணப்படும் கீழ்காட்டுமான வசதிகள் மற்றும் அங்கவீனம் அல்லாத மக்களின் மனேநிலை என்பன தடைகளாகும்”. (நேர்காணல் 02)

பங்குபற்றல் என்பது ஒருவனது எல்லைகளுக்குட்பட்ட வகையில் அதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது அவனது உரிமையாகவும் அவனது முழுமையான விருத்தியினை தீர்மானிப்பதிலும் அவன் சமூகத்தில் தலைசிறந்த மனிதனாகவும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான அடிப்படையாகும். ஒவ்வொரு தனிநபர்களும் தமது வாழ்கை தொடர்பான தீர்மானங்களை தமது வயதுக்கட்டங்களுக்கு உட்பட்ட வகையில்

ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தினை தொழல்வாண்மையான சமூகப்பணியானது சமூகப்பணித் தத்துவங்கள், விழுமியங்கள், ஒழுக்கநெறிக்கோவை மற்றும் மூலதர்மங்கள் ஊடாக உறுதிப்படுத்துகின்றது. சமூகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் பங்குபங்குபற்றலுக்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் காணப்படுகின்ற போதிலும் தனிபட்ட மற்றும் பௌதீக மற்றும் சமூகச் சூழலில் காணப்படுகின்ற வரையறைகள் காரணமாக சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. அங்கவீனர்களுக்கு காணப்படுகின்ற உடல், உள மற்றும் முழுமையான அங்கவீனம் மற்றும் சமூக மற்றும் பௌதீக சூழலில் காணப்படுகின்ற தடைகள் காரணமாக தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்வதற்கான சம சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டதாக காணப்படுகின்றது. இதன் காரணமாக அங்கவீனர்கள் தாங்கள் சமமாக நடத்தப்படுவதாக உணராத பல சம்பவங்கள் உள்ளன. மற்றவர்களைப் போல அவர்கள் சமூகத்தில் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இது சமூகமாதிரி மற்றும் மனித உரிமைகள் மாதிரியினை மையப்படுத்திய செயற்றிறனான நடைமுறைத் பயன்பாட்டினை அணைத்து பங்குதாரர்களும் முறையாக விளங்கிக் கொள்வதோடு அவற்றினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கான செயற்றினான நடவடிக்கைகளையும் மேற்கொள்வது அணைத்து பங்குதாரர்களின் பெறுப்பபாகக் காணப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் உடல் ரதீயான அங்கவீனர்கள் உற்பத்தியில் செயற்றிறனின்மை, வரையறுக்கப்பட்ட வேலைவாய்ப்பு விருப்பங்கள், தொழில் திட்டமிடலில் கவனத்தில் கொள்ளப்படாமை, கடன் கிடைப’பதில் காணப்படும் வரையறைகள் நிதிச் சுமை மற்றும் உளவியல் மன அழுத்தம் ஆகியவற்றால் கடுமையாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதுடன் வாழ்கைக்கு தேவையான அடிப்படையான வருமானத்தினை பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர். உடல்ரீதியான அங்கவீனமானவ்கள் தமது நாளாந்த வாழ்க்கை முறையைப் பராமரிப்பதில் எதிர்கொள்ளும் சிரமங்கள் பெரும்பாலும் சூழல், அவர்களின் அங்கவீனத்தின் வகை மற்றும் தீவிரத் தன்மையினை மற்றும் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் வரையறைகள், சமூகப் புறக்கணிப்பு, என்பன அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதனை ஆய்வு பெறுபேறுகள் கேடிட்டுக்காட்டுகின்றன. குறிப்பாக தனிப்பட்ட சமூக மற்றும் பௌதீக சூழலில் காணப்படுகின்ற வரையறைகள், பாரபட்சம் காட்டப்படுதல், மற்றும் ஒரம்கட்டப்படுதல் ஆகியவற்றின் விளைவாக உடல் ரீதிாயன அங்கவீனர்கள் அவர்களுடைய வாழ்கைக்கு தேவையான அடிப்படை பொருளாதார விடயங்களை அடைந்து கொள்ள முடியாதநிலையில் உள்ளனர்.

அரச மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைத்துக் கொள்ளும் நிதி மற்றும் ஏனைய வாய்புக்களையும் வினைத்திறனான வகையில் பயன்படுத்திக் கொள்வதில் பெரும்பாலான அங்கவீனர்கள் சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக சமூகத்தில் காணப்படுகின்ற சாதகமற்ற அணுகுமுறைகள், உடல் ரீதியான குறைபாடுகள், வேலைவாய்பபுகளில் காணப்படுகின்ற மட்டுப்பாடுகள் என்பன அங்கவீனர்கள் தமது இலக்குகளை திட்டமிட்டுக் கொள்ளவும் அவற்றினை நடைமுறைப்படுத்தவும் முடியாதநிலை காணப்படுகின்றது. இது உடல் ரீதியான அங்கவீன்களை மட்டுமல்லாது அவர்களது குடும்பம் மற்றும் முழுமையான பொருளாதாரத்தினையும் பாதிப்புக்குட்படுத்துகின்றது.

பரிந்துரைகள்

உடல் ரீதியான அங்கவீனற்றவர்களின் தொழில்வாய்புக்களை உறுதிப்படுத்தவும் அவற்றினை மேம்படுத்தனூடாகவும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் காணப்படுவதினை ஆய்வு முடிவுகள் கோடிட்டுக்காட்டுகின்றன. சமூகத்தில் உடல் ரீதியான அங்கவீனர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புகளைக் பல்துறைசார் நிபுணர்களின் பங்கேற்புடன் விஞ்ஞான ரீதீயான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி தனிநபர் அணுகுமுறையினூடாக சுயதொழில் முயற்சிகள் அரசாங்க, தனியார் மற்றும் ஏனைய தொழிற்துறை செயற்பாடுகளில் அவர்களுக்கான வேலை வாய்ப்புக்களை உறுபடுத்திக் கொள்வதோடு அவர்களின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் பொருட்டு, அவர்களுக்கு ஏற்ற பயிற்சித் திட்டங்கள் மற்றும் பொருத்தமான தொழிற்துறைத் திட்டங்களை உருவாக்குவதில் அணைத்து பங்குதாரர்களுடைய பங்களிப்பினை உறுதிதப்படுத்திக் கொள்ளுதல் வேண்டு

நடமுறையில்காணப்படும் கொள்கைகள் மற்றும் சுற்றிக்கைகள் மற்றும் அங்கவீனர்களோடு தொடர்புடைய ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற கொள்கைகள் மற்றும் சுற்றிக்கைளை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் செயற்றிறான செயலாற்றுகைகளை உறுதிதப்படுத்திக் கொள்வதற்காக கிடையான மற்றும் செங்குத்தான மேற்பார்வை பொறிமுறையினை உருவாக்குவதில் அங்கவீனர்களுக்கான தேசிய செயலகத்துடன் இணைந்து ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் செயற்படுவதற்கான பொறிமுறையினை ஏற்படுத்திக் கொள்வது சிறந்த மற்றும் நிலைத்திருக்கக் கூடிய பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கான அடிப்படையாக அமையும். எடுத்துக்காட்டாக ஆகஸ்ட் 18, 1988 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை எண். 27/88 இன் படி, அனைத்து அமைச்சகங்கள், துறைகள் மற்றும் நிறுவனங்களும் பொதுத்துறையில் காலியாக உள்ள பதவிகளில் 3% ஐ தேவைகளைப் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறையினையும் அவர்கள் தொழில்கொள்ளும் நிறுவனங்களில் பொருத்தமான மற்றும் செயற்றினாக தொழிற்படுத்துவதற்கான ஏனைய ஏற்பாடுகளையும் உறுத்திப்படுத்துவதற்கான அணைத்து ஏற்பாடுகளையும் உறுதிப்படுத்துவதற்கான முழுமையான பொறுப்புக்களையும் குறிப்பிட்ட குழுவின் மேற்பார்வையின் கீழ் முழுமையான அதிகாரத்தினையும் அரசு மற்றும் அதனோடு தொடர்புடைய அமைப்புக்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

உடல்ரீதியாக அங்கவீனமுற்றவர்களில் பெரும்பாலானவர்கள் சுயதொழிலினை கௌரவாமான முறையில் செய்ய விரும்புவதினை ஆய்வுப் பெறுபேறுகள் சுட்டிக்காட்டுகின்றன. தொழிற்தெரிவுகள், தொழில்நுட்ப கிடைப்பனவு, தேவையான வழிகாட்டல்கள், பொருத்தமான இடமைவு, நிதி ரீதியான கிடைப்பனவும் உறுதிப்பாடு மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பன அங்கவீனர்களுடைய தொழில்துறை தொடர்பான நிலைபேறினை உறுப்படுத்துக்கின்றன. ஆய்வினுடைய முடிவுகளை நோக்குகின்றபோது பொரும்பாலான அங்கவீனர்கள் தமது தொழிற்துறை தொடர்பான தெரிவுகளை மேற்கொள்ளும்போது மேற்குறிப்பிட்ட தொழிற்துறைக்கான அடிப்படை பண்புகளை பூர்த்தி செய்யாத தன்மையினை ஆய்வு முடிவுகள் சுட்டடிக்காட்டுகின்றன. அரசு மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்களினூடாக மேற்குறிப்பிட்ட பண்புகள் உறுதிப்படுத்தப்படுவதோடு பொருத்தமான தெரிவுசெய்வதில் தெரிழில்துறைசாா்ந்த நிபுணர்களுடன் இணைந்த வகையில் அங்கவீனர்கள் மற்றும் அவர்களுடைய பங்கேற்புடன் இணைந்தவகையில் செயற்றினாக மேற்கொள்ளுதல் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். இதன் குறுங்கால மற்றும் நீண்டகாலமாக காணப்படும் சமூகக்களங்கம், பாகுபாடு, ஓரம்கட்டப்படுதல் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதற்கும்

அங்கவீனமான நபர்களின் வருமானத்தை ஆதரிப்பதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அடிப்படையானதாக அமையும்.

சமூகமாக்கலில் காணப்படும் மட்டுப்பாடுகள் சமூகப்பங்கேற்புக்கான மிகப்பெரிய சவாலாகக் காணப்படுகின்றது. பொரும்பாலான சமூகப்பங்கேற்பானது அணுகும் வசதிகளில் காணப்படும் மட்டுப்பாடுகள் மற்றும் சமமற்ற கிடைப்பனவுகள் அவர்களின் ஆக்கபூவர்மான சமூக இடைவினையினை கேள்விக்குரியதாக்குகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் அங்கவீனர்கள் தொடர்பான நேர்மறையான சிந்தனைகளை ஏனையவர்கள் மத்தியில் வலுப்பெறுவதற்கான அடிப்டையானதாக அமைகின்றது. அரசு மற்றும் அதனோடு தொடர்புடைய நிறுவனங்கள் அணுகும் வசதிகளில் காணப்படும் மட்டுப்பாடுகளையும் சமமற்ற தன்மையினையும் இழிவுமட்டத்தில் பேணுவானூடாக அங்கவீனர்களை சமூகமட்டத்தில் நிலையான சமூக உறவினையும் நன்னிலையினையும் கட்டியெழுப்புவதற்கான அடித்தளமாக அமையும். மேற்குறிப்பிட்ட பரிந்துரைகள் உடல் ரீதியாக அங்கவீனர்களின் நிலையான வேலைவாய்ப்புக்களை வழங்குவதோடு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவுவதற்கான நடவடிக்ககைகளை உறுப்படுத்திக் கொள்வதற்கு வழிசமைக்கும்.'


Bailey, A &. (2000). Providing effective coping strategies and supports for families with children with disabilities. Intervention in School and Clinic, 294-296.

Barron, T. a. (2007). Disability and Inclusive Development. Leonard Cheshire, 1-20. Carver CS1, S. M. (1989 Feb). Assessing coping strategies. J Pers Soc Psychol., 267-83.

Chambers, R. a. (Published on 1 October 1992). Sustainable Rural Livelihoods: Practical Concepts for the 21st Century. IDS Discussion Paper, issue 296, 1-2.

Diana. C. a. (1998). Sustainable rural livelihoods approach. London: London: Department for International Development, 1998.

Ellis, F. (1998). Livelihoods Diversification and Sustainable Rural Livelihoods. DFID, Pp. 53-65.

Folkman S, L. R. (1980). An analysis of coping in a middle aged community. Journal of Health and Social Behavior, 219- 239.

Front, D. O. (Third Cycle, 28th Session 2017). UN Universal Periodic Review - Sri Lanka 2017. Postal Address: No 33, Rajamawatha, Rathmalana, Sri Lanka Telephone/ Fax: 0094112721383 Email: dojf@sltnet.lk Web: www.gojf.org: Disability Organizations Joint Front.

Groce, P. N. (2011). Disability and the Millennium development goals. New York: United Nation Publication.

Hägnebo, G. A. (March 2003, Volume 10, Issue 1). Hearing Impairment, Coping Strategies, and Anxiety Sensitivity. Journal of Clinical Psychology in Medical Settings, pp 35–39.

Helon, R. a. (2003). Assisting Disabled Person in Finding Employment:. Geneva: International labor organization.

International, H. (2015). Employment for disabled persons to participate and. handicap international.

Ministry of social services, welfare and Livestock Development,. *National Policy On Disability.*. Colombo: Ministry of social services, welfare and Livestock Development, 2005. Print.

Mithaug, D.E. (1979) Negative employer attitudes toward hiring the handicapped: fact or fiction? Journal of Contemporary Business, 8 (4), 19-26.

Shire. (2013). Livelihood challenges for extremely poor disabled people in the southwest coastal region of Bangladesh. Bangladesh: save the children.

Munyi, C. (2012). Past and Present Perceptions Towards Disability: A Historical Perspective. Disability Studies Quarterly, 32(2). Retrieved from http://dsq-sds.org/article/view/3197/3068

Disability inclusion overview. (n.d.). Retrieved April 21, 2023, from https://www.worldbank.org/en/topic/disability.

Livelihoods and disability: The complexities of work in the Global South. (n.d.). Retrieved April 21,2023,https://www.researchgate.net/publication/284027763_Livelihoods_and_Disability_The_Complexities_of_Work_in_the_Global_South